**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

# OS. No. 165 /2021

**08.04.2026**

## P.W.1- ரவி

**சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

பிரதிவாதியை எனக்கு நேரடியாக தெரியும். எனது அப்பாவுக்கும், பிரதிவாதிக்கும் இடையே வரவு, செலவு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும்போது நானும், அப்பாவும் இருந்தோம். பணம் கொடுக்கும்போது நான் எதுவும் வாங்கவில்லை. பிரதிவாதியிடம் காசோலை, கடனுறுதி சீட்டு ஆகிய எந்த ஆவணங்களையும் நான் வாங்கவில்லை. பிரதிவாதிக்கு, எனது தகப்பனார் கொடுத்த பணம் நம்பிக்கையின் அடிப்படையில் ஆவணங்கள் இன்றி கொடுத்த பணம் என்றால் சரியல்ல. ரூ.5,50,000த்தை எனது தகப்பனார், பிரதிவாதிக்கு கொடுத்தார். மேற்படி தொகை ஒரே தவணையாக கொடுக்கப்பட்டது. ரூ.50,000-க்கு மேல் பணம் பரிவர்த்தனை செய்யும்போது வங்கி மூலம் தான் கொடுக்க வேண்டும் என்பது எனக்கு தெரியும் என்றால் தெரியாது. கடன் கொடுத்தாக சொல்லப்படும் தொகை ரூ.5,50,000-க்கு வருமான வரி கணக்கு காட்ட வேண்டும் என்றால் தெரியாது. மேற்படி தொகையை கைமாற்று கடனாக கொடுத்தோம். பத்திர அலுவலகத்தில் பதிந்து கொடுத்தார். நாங்கள் வட்டி வாங்க விரும்பவில்லை என்றால் சரியல்ல. பதிந்து கொடுத்த பத்திரத்தில் சொல்லியுள்ள படி வட்டி கேட்டோம். கைமாற்று கடனுக்கும், வட்டிக்கு பணம் கொடுப்பதற்கும் வித்தியாசம் தெரியும் என்றால் சரிதான். பத்திரத்தில் என்ன வட்டி எழுதப்பட்டது என்றால் 3 வருடத்திற்குள் கொடுத்தால் ரூ.100-க்கு ரூ.1.25 வட்டியும், அதற்கு மேல் போகும்போது ரூ.1.50 வட்டியும் கொடுக்க வேண்டும் என எழுதப்பட்டது. பத்திரம் எழுதும்போது நான் இல்லையென்றால் சரியல்ல. மேற்படி தொகையை நான் தான் கொடுத்தேன். ஆனால் எனது பெயரில் மேற்படி ஆவணம்

எழுதப்படவில்லை என்றால் சரிதான். ஆவணத்திலும் நான் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எழுதப்பட்ட சங்கதிகள் பற்றி எனக்கு தெரியும். மேற்படி பத்திரத்தில் சாட்சி கையெழுத்து யார்
செய்தது என்றால் ஞாபகமில்லை. நான் பணம் கொடுக்கவில்லை என்றாலும், பத்திர அலுவகத்திற்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எனது தகப்பனார் மேற்படி பத்திரத்தில் கையெழுத்து செய்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஈடுகடன் பத்திரத்தில் எனது அப்பாவின் கையெழுத்து இல்லை என்றால் சரிதான். எனது அப்பாவும், பிரதிவாதியும் சேர்ந்து கையெழுத்து செய்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் இல்லை. நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிப்பதால் வழக்கு குறித்து எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

**Sd/-P.S.Ruskin Raj,**
**Sub Judge,**
**Usilampatti.**